Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 09 (12.04.2003) சனிக்கிழமை இதழ் :191

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
**பலிக்களம்**
(திருப்பாடுகளின் காட்சி)
இன்று மூன்றாவது நாளாக
10,11,12,13 ஏப்ரல் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். -திருமறைக்கலாமன்றம்.
(அ-767)

# வடக்கு – கிழக்கில் கடல் எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படவேண்டும்!

## அரசாங்கத்தை வலியுறுத்துகிறது கண்காணிப்புக்குழு



(கொழும்பு)

**வட - கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான கடல் எல்லைகள் தொடர்பாக, போர்நிறுத்த உடன்பாட்டில் தெளிவான சரத்துக்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும் என, அரசாங்கத்தைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வலியுறுத்திக் கேட்டுள்ளது.**

வட - கிழக்குப் பகுதிகளில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து 20 கிலோமீற்றர் வரையான கடற்பகுதியை - தமது கட்டுப்பாட்டுக்குரிய கடற்பகுதியாக அங்கீகரிக்க வேண்டுமெனப் புலிகள் கேட்டிருப்பதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாகத் தாம் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடியே முடிவுகளை அறிவிக்க முடியும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையிலான கடற்பிரச்சினைகள் தொடர்பாக, அடுத்த சில வாரங்களுக்குள் உறுதியான தீர்வு கிடைத்துவிடும் என்றும், இது தொடர்பாக - தான் அரசு மற்றும் இராணுவ, கடற்படை அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் அப்பையா வீரச்சாவு

1997 டிசெம்பர் 24 ஆம் திகதி, நவவிப் பகுதியில் அரசின் கைக்கூலிகளால் கொலை செய்யப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

லெப். கேணல் அப்பையா (ஐயாத்துரை இராசையா - சொந்த முகவரி: மருதடி வீதி, மானிப்பாய். தற்போதைய முகவரி: இல. 228, யோகபுரம், மல்லாவி) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு புலிகள் வீரவணக்கத்தைச் செலுத்துவதாக அறிவித்துள்ளனர்.

## விண்ணாணம் விநாசியர்



ஆடு, மாடுகளைப்போல சனத்தை ஏத்துறவை பாடு இனி திண்டாட்டம்தான்...!

## இலங்கை அமைதி முயற்சிகள் நம்பிக்கையைத் தருகின்றன!

### அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ்

(வொஷிங்ரன்)

ஈராக் யுத்தம் காரணமாக - இலங்கையின் சமாதான முயற்சிகள், உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாடு என்பவற்றில் இருந்து சர்வதேச சமூகத்தின் கவனம் திசைதிருப்பப்படவில்லை என்று அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

வொஷிங்ரனில் பொருளாதார, புனரமைப்பு, விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவை, நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே, மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

இலங்கையின் சமாதான முயற்சி மற்றும் பொருளாதார புனரமைப்புத் திட்டம் ஆகியவை நம்பிக்கை தருவதாக அமெரிக்க அரசாங்கம் கருதுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை - சமாதானப் பேச்சுக்களில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றும் பஸ் சாரதிகள் கைதாவர்

### 21 ஆம் திகதியிலிருந்து பொலிஸார் நடவடிக்கை

பிரதம நீதியரசரின் உத்தரவின் பேரில் - யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை வலுப்படுத்துவது தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் - யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா, மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங்கோவன், ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம், சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் மற்றும் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹரல் அன்ரனி மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் - குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை வலுப்படுத்துவதற்காக உடனடியாகச் சில விடயங்களை அமுல்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்பட்டு, முறைப்பாடுகளைத் தமிழில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், குற்றப்பத்திரங்களை தமிழில் தாக்கல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை இசை, நடன, நாடக விழா; ஆறு கலைஞர்களுக்கு விருதுகள்!




திருகோணமலையில் நடைபெற்றுவரும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2' இசை, நடன, நாடக விழாவின் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று விவேகானந்தக் கல்லூரியில் கோலாகலமாக நடைபெற்றன.

திருமலை விவேகானந்தக் கல்லூரி அதிபர் சி.நவரட்ணம், மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். புவனா தண்டாயுதபாணி விழாச்சுடர் ஏற்றினார்.

விடுதலைக்காக வீரமரணம் எய்திய போராளிகள், நாட்டுக்காக இன்னுயிர் நீத்த பொதுமக்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து வரவேற்புரையை ஆயதீந்திரா நிகழ்த்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இசை அரங்கில் சங்கீத பூஷணம் செ.குமாரசாமி இசை நிகழ்த்திய பின், எஸ்.டொமினிக் இசைக்குழுவின் நாட்டார் இசை நிகழ்வு இடம் பெற்றது.

உரையரங்கிற்கு குறளமுதம் கா.விநாயகசோதி தலைமை வகிக்க, பேராசிரியர் சண்முகதாஸ் கருத்துரை வழங்கினார். அதன்பின்பு விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா கருத்துரை வழங்கினார்.

நேற்றைய விசேட நிகழ்வாக விருது வழங்கும் வைபவம் இடம் பெற்றது. ஆறு கலைஞர்கள் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இசைத்துறையில் தடம்பதித்தமைக்காக 'இசைமணி' சங்கரலிங்கமும், கலாபூஷணம் பட்டத்தைப் பெற்ற சித்தி அமரசிங்கமும், இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தியும் விருதுகளைப் பெற்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் உரிமைகள் பற்றிய பயிற்சி இம்மாத இறுதியில் நடத்தப்படும்!

### கிளிநொச்சி கூட்டத்தில் தீர்மானம்

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான புனர்வாழ்வு அளிப்பது பற்றிய இரண்டுநாள் செயலமர்வு, நேற்று கிளிநொச்சியில் நிறைவடைந்தது.

நேற்றைய செயலமர்வில் - சிறுவர்களின் வாழ்வு நிலைகளைப் பற்றிய திட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான பயிற்சிநெறியின் நடவடிக்கைகள்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகவும், அரசின் ஆயுதப்படைகளுக்காகவும் மற்றும் சமூகம் சார்ந்த சிறுவர்களுக்காகவும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்கியிருக்கும்.

இப்பயிற்சிநெறியினை, இம்மாத இறுதிப் பகுதியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமூகமட்டத்திலும், பெற்றோர் மட்டத்திலும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்கமுடியுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### பரீட்சைக்கு ஆயத்தமாகும் உயர்தர மாணவர்களே!

பரீட்சை மண்டபத்திற்கு புக முன்னர் உங்களை நீங்களே தயார்படுத்திக்கொள்ள வழிகாட்டும் குறிப்புகள் - நாளை முதல் நமது ஈழநாட்டில் வெளிவருகின்றன.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி-730) 01-505632, 074-612656, 01-390128

# க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகளில் பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் - யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளின் முன்னணிப் பெறு பேறுகளில் மேலும் சில.



தெ. இனோதாரணி



இ. சௌமியா

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

வித்தியா இரட்ணசாமி 10A, சுகனியா பாலேந்திரன் 9A C, உமாசாந்தி பவளநாதன் 9A B, இளவஞ்சி கனகநாயகம் 9A C, சுஜிதாசாயி கேதீஸ்வரன் 9A B, மிலன் ரெல்சன் 9A S, பௌத்ரா இராசலிங்கம் 9A S மற்றும் ஐந்து மாணவிகள் - 8A, எட்டு மாணவிகள் - 7A , நான்கு மாணவிகள் - 6A, பத்து மாணவிகள் - 5A

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

இனோதாரணி தெய்வபுலேந்திரா 10A, சௌமியா இராஜகோபால் 10A, கீர்த்தனா இராஜேந்திரன் 9A B, உமாஜினி பாலச்சந்திரன் 9A B, ஜனாதனா சுப்பிரமணியம் 9A C, ஜனனி இராமகிருஷ்ணா 9A C, வஜீரணா அருளானந்தம் 9 A C.

**கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

பத்மதேவன் சசிகரன் 7 A B S, சசிதா புவனேஸ்வரராஜா 5A 2B C S, யோகராஜா சிறிரகுநாத் 5A 3C S.

**யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்**

எட்வேட் டெனிசியா 8A 2B, திலகரட்ணம் மேரிசிந்துஜா 8A 2B, ஜென்சி ஞானசோதியன் 7A 2B C, ஒரு மாணவி - 6A , ஐந்து மாணவிகள்- 5A .

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

திருமால் ஜீவகன் 9A B, கார்த்திகா உதயகுமார் 9A B, 4 மாணவர்கள்- 8A, 6 மாணவர்கள் - 7A, பதினொரு மாணவர்கள் - 6A, பன்னிரண்டு மாணவர்கள் - 5A.

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

கலையரசி தர்மலிங்கம் 5A 3B 2C, பகீரதி கந்தசாமி 5A 3B C S, இருவர் - 4A.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

இ.சிவகுமார் 6A 3B S, கோ.பிரிந்தா 6A 2B C S, விஜயகுமார் 5A, 3B C.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

சிவராசா நவநீதன் 4A 4B C, கே.கவிதா 3A 2B 3C S.

**தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி**

சுகந்தினி சண்முகரட்ணம் 8A 2B, இராசதுரை ரதீபன் 8A B C, நான்கு மாணவர்கள் - 7A, இரண்டு மாணவர்கள் - 6A , மூன்று மாணவர்கள் - 5A.

**தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**

அனுஷா இரட்ணம் 7A B 2C, ருஷாந்தி அருணகிரிநாதன் 7A 2B C, சிந்துஜா துரைராஜா 7A B 2C

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

பிறேமதாசன் தீபன் 7A C 2S, தம்பிராசா சண்முகப்பிரியன் 4A B 3C 2S, திருவாஞ்சீஸ்தரன் சொருபன் 4A 2B 3C S.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

பபிதா சிறிசந்தணராஜா 8A B C, தனுஜா வைரமுத்து 7A 2B C, நான்கு மாணவிகள் - 6A.

**உடுவில் மகளிர் கல்லூரி**

கார்த்திகா பாலச்சந்திரன் 9A B.

**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

ப.நிருபன் 9A, சூ.விஜயராணி 7A 2B C, கு.குலராஜ் 6A 3B C, க.பிரசாந்தன் 6A B 3C, சி.சுவர்ணன் 4A 3B C 2S, சி.நிகாசன் 4A 2B 2C.

**கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி**

த.கிருபாலினி 7A 2C S, கு.துஷ்யந்தினி 7A 2C S, து.சிவரூபன் 7A C S, க.கௌசல்யா 6A 2B 2C, பி.ஜெயச்சந்திரா 6A C 3S.

**தேவரையாளி இந்துக் கல்லூரி**

கே.குமரன் 5A B 2C 2S, எஸ்.ரஜீவன் 3A B 4C S, வி.சுவர்ணமுகி 3A 3B C 2S, எஸ்.அஸ்கா 2A 2C 3S.

## அரியாலையில் இன்றுமுதல் சுதேசிய நாள் விழா

அரியாலை மக்களும் அரியாலையிலுள்ள 13 சனசமூக நிலையங்களும், பாரம்பரியமாக வருடாவருடம் கொண்டாடிவரும் சுதேசிய நாள் கொண்டாட்டவிழாவின் 84 ஆவது ஆண்டுவிழா, இன்று முதல் நாளை மறுநாள் வரை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் மற்றும் அரியாலை சனசமூக நிலையம் ஆகியவற்றில், ஆ.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ், யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளும் மேற்படி விழாவில் - 5 மைல் மரதன் ஓட்டம், 15 மைல் சைக்கிள் ஓட்டம் மற்றும் பாரம்பரியப் போட்டிகள், மெய்வன்மைப் போட்டிகள், பொதுக்கூட்டம், பரிசில் வழங்கல், நாடகங்கள், இசை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (55)

## பருத்தித்துறை சந்தையில் கதவு இல்லாத நிலையில் பொது மலசல கூடம்

(வடமராட்சி)

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையில் அமைக்கப்பட்ட மலசல கூடத்திற்கு, நீண்டகாலமாகியும் கதவு போடப்படவில்லை. இதனால் அதனைப் பயன்படுத்த முடியாதிருப்பதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரில் புதிதாக அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தையில், வியாபாரிகள் மற்றும் ஏனைய வர்த்தகர்களும் பாவிப்பதற்கென மலசலகூடம் அமைக்கப்பட்டது.

இதற்கு கதவினைப் பொருத்தித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை கோரியிருந்தபோதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென வியாபாரி ஒருவர் ஆதங்கப்பட்டார். (2

## பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பம்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் - பெண்களுக்கான விசேட தையல் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வகுப்புக்கள் - திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளிலும் ஆண்களுக்கான வாத்திய வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறவுள்ளன.

மேற்படி இரு பயிற்சிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்புவோர் - தமது சுய விபரங்களுடன், எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் 'பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம், இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்' எனும் முகவரியில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இன்றைய நாள் இனிய நாள்

**12-04-2003 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தொழில் சமம், களஸ்திர சுகம், தேக மெலிவு, சத்துரு வெற்றி, காரிய சித்தி. |
| இடபம் | :- நற்கீர்த்தி, பேரும் புகழும் கிடைத்தல், களஸ்திர மகிழ்ச்சி பெரியோர் மதிப்பு. |
| மிதுனம் | :- அதிகார வெற்றி, புத்திர லாபம், சத்துரு வெற்றி, சுப காரியப் பேறு. |
| கர்க்கடகம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, நிலைமாற்றம், வீண்பழி கேட்டல், பிரயாணக் கஷடம். |
| சிங்கம் | :- மனக்கவலை, கெட்ட சகவாசம், பெரியோர் மதிப்பு, நற்கீர்த்தி. |
| கன்னி | :- ஐஸ்வர்யம், சரீரசுகக் குறைவு, நேத்திர ரோகம், தொழில் கஷ்டம், வாக்குக் கலகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- சத்துரு பயம், ரோகபீடை, காரிய விக்கினம், நற்கீர்த்தி, தேகசுகம். |
| விருச்சிகம் | :- நன்மதிப்பு, சிநேக உதவி, களஸ்திர சுகம், ரோக நீக்கம், பெரியோர் மதிப்பு. |
| தனு | :- இரத்தப்பெருக்கு, வியாதி, பொருள் நஷ்டம், பிரயாச மிகுதி, அற்ப லாபம். |
| மகரம் | :- புதிய ஸ்தானம், சந்தோஷ மிகுதி, பொருள் வரவு, தார புத்திரலாபம், குடும்ப மகிழ்ச்சி. |
| கும்பம் | :- ஏமாற்றம், பயனற்ற பிரயாசம், இல்லச் சிறப்பு, பெரியோர் மதிப்பு, தனதானிய விருத்தி. |
| மீனம் | :- இனசன கவலை, சம பலன், காரியானுகூலம், இல்லச் சிறப்பு, வாகன சுகம். |

## சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய யுவதி கைது!

சாவகச்சேரி நகரப் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை இரவு ரோந்து சென்ற சாவகச்சேரி பொலிஸார் யுவதியொருவரைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது - உரும்பிராயைச் சேர்ந்த இந்த யுவதி, சாவகச்சேரி நகரப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியபோது, நள்ளிரவு வேளையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரே இவரைக் கைதுசெய்துள்ளனர்.

இவரை கடந்த 10 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது - எதிர்வரும் 17 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் கஸ்தூரியார் வீதியில் நல்ல சூழலில் சில அடிப்படை வசதியுடன் பெரிய வீடு, வாகனத் தரிப்பிடம், தென்னங்காணி வளவுடன் வாடகைக்குண்டு. பெரிய குடும்பத்திற்கு கம்பனிகளுக்கு, காரியாலயத்திற்கு, நிறுவனங்களுக்கு உகந்தது. வெளிநாட்டு கம்பனிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வீட்டுடன் ஒரு பகுதியில் களஞ்சியமாகப் பாவிக்கக்கூடிய வசதியும் உண்டு. மாத வாடகையுடன் 2 வருட முற்பணம். பார்வையிடும் நேரம் காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை, மேலும் விவரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளலாம்.

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

456, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(309)

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI,
426(302) K.K.S. ROAD,
JAFFNA. (சி-757)

## தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)

### லொறிச்சாரதி பதவி றிலீவ் சாரதி (RELIEF DRIVER)

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் பூரணப்படுத்தி 2003. 04. 25ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் (வ-து) தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

சம்பளம்: நாள் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் பஸ் வண்டி/லொறிச்சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 4 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்.

2003-04-11 (சி-817)

ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
இரவு 9.30 மட்டும் HOLLOW MAN
புதுவருட வெளியீடு
அரசு
(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
Jurrasic Park - 3
(பாடசாலை மாணவர் பார்த்து மகிழக்கூடியது)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
BEST OF THE BEST
14.04.2003 முதல் ரமணா
(சி-731)


## நீங்காத நினைவுகள்

| 25 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு |
|---|---|
| தோற்றம் 20 - 05 - 1928 / மறைவு 12 - 11 - 1978 | தோற்றம் 10 - 07 - 1937 / மறைவு 26 - 03 - 1999 |



நாகமுத்து வேலாயுதர்



வேலாயுதர் அன்னலட்சுமி

திதி:
12-04-2003

எம் குறை களைந்து எம் வாழ்வின்
உயர்விற்காய் உழைத்த உத்தமர்களை
என்றும் மறவோம்.

கைதடி வடக்கு,
கைதடி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-818)


## STP கணனி நிறுவனம் நமது ஈழநாட்டுடன் இணைந்து நடாத்தும் தென்மராட்சி மக்களுக்கான இலவச கணனிக் கருத்தரங்கு

காலம் : 16 . 04 . 2003 நேரம் : 10.00 – 1.00

இடம் : சாவகச்சேரி இந்துக்கல்லூரி

STP கணனி நிறுவனம், கந்தர்மடம், யாழ்ப்பாணம். நமது ஈழநாடு.



'நமது ஈழநாடு' வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்திய க.பொ.த.(உ.த) மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கில் இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை முகாமையாளர் உலகநாதன், ஐ.ஐ.எஸ்.நிறுவன இயக்குநர் விக்னேஸ்வரன், பூபாலசிங்கம் புத்தகசாலை முகாமையாளர் மகாலிங்கம், கொமர்ஷல் வங்கி முகாமையாளர் ரவீந்திரா, இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் நடராஜலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படங்களில் காணலாம்.



க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கில் நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சி.சிவமகாராஜா மங்களவிளக்கேற்றுவதையும், கருத்தரங்கில் கலந்துகொண்ட ஒருபகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## க.பொ.த. (சா/த) பரீட்சையில்

# 3064 மாணவர்களுக்கு எட்டுப் பாடங்களிலும் 'ஏ'!

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சையில் 3064 மாணவர்கள் எட்டுப்பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெற்றுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையில் கொழும்பு மிகூசியஸ் கல்லூரி மாணவியான மயூரி சந்திரலதா அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இரண்டாமிடத்தைக் காலி சவுத்லான்ட் பெண்கள் பாடசாலை மாணவி இசுறி சந்திரபால மற்றும் கபுனி லியன குணவர்த்தன ஆகியோர் பெற்றுள்ளனர்.

எட்டுப்பாடங்களிலும் 52 ஆயிரத்து 796 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஆறு பாடங்களுக்குமேல் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 566 ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 34 ஆயிரத்து 766 பேர் ஒரு பாடத்திலேனும் சித்தியடையவில்லை எனத் தெரியவருகின்றது.

4 இலட்சத்து 32 ஆயிரத்து 781 மாணவர்கள் இம்முறை க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 422 மாணவர்கள் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கத் தகைமை பெற்றுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையினர் நடாத்தும் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெறுமென யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## அடுத்த சுற்று சமாதானப் பேச்சு; ஒஸ்லோவில் நடத்த ஆலோசனை!

அரச தரபபுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை தாய்லாந்திலிருந்து இடம்மாற்றுவது பற்றி மிகவும் தீவிரமாக ஆராயப்படுவதாகத் தெரியவருகின்றது.

ஏழாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் தாய்லாந்தில் இம்மாத இறுதியில் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் தென்கிழக்காசிய நாடுகளில் தீவிரமாகப் பரவி வரும் சார்ஸ் ஆட்கொல்லி நோயாலும், புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நலக்குறைவினாலும் தாய்லாந்திலிருந்து பேச்சுக்களை இடம்மாற்றுவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

மாற்று ஒழுங்காக இம்மாதம் 29 ஆம் திகதி முதல் மே 2 ஆம் திகதி வரை பேச்சுக்களை ஒஸ்லோவில் நடத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

## தேசியப் பாடசாலைகளில் பற் சிகிச்சை நிலையங்கள்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துத் தேசிய பாடசாலைகளிலும் பற்சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாடு முழுவதும் 320 தேசிய பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 20 பாடசாலைகளில் மட்டுமே பற்சிகிச்சை நிலையங்கள் உள்ளன. எனவே எஞ்சிய 300 பாடசாலைகளிலும் பற்சிகிச்சை நிலையங்களை அமைக்க - சுகாதார அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இதற்கென 20 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது. அடுத்த வருடம் இந்தப் பற்சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

## சமாதானச் சூழலைப் பயன்படுத்தி புலிகள் தம்மை பலப்படுத்துகிறார்கள்

### ஜனாதிபதி சந்திரிகா வாஜ்பாயிடம் முறையீடு

(புதுடெல்கி)

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களைச் சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு தம்மைப் பலப்படுத்தி வருவதாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

புலிகள் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி ஆயுத தளபாடங்களைப் பெறுவது மட்டுமன்றி தமது படைக்கு ஆட்களையும் சேர்த்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில் சமாதானப் பேச்சுக்கள் குறித்த தனது தரப்பு நிலைப்பாட்டையும் ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சமாதான முயற்சிகளை இந்தியா தொடர்ந்து ஆதரிக்கும் என்றும் இந்தியாவில் புலிகள் மீதான தடை தொடர்ந்து அமுல் நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

# ஜனாதிபதியின் ஒப்புதலின்றி கருத்துக்கணிப்பு நடத்த முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஒப்புதலின்றியோ அல்லது உயர்நீதிமன்றத்தின் அனுமதியின்றியோ நாட்டில் கருத்துக் கணிப்பை நடத்த முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு ரீதியாக அரசாங்கத்துக்குக் கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை. இந்த நிலையில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தொடர்ந்து கருத்துக்கணிப்பு நடத்துவது பற்றி ஏன் பேசுகிறார் என்பது புரியவில்லை.

சமாதான முயற்சிகள் பெரியளவில் முன்னேற்றமடையாத சூழலில் மக்களின் கருத்துக்களை அறிவதற்குக் கருத்துக்கணிப்பு நடத்துவதற்கு, பொ.ஐ.மு. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பேச்சுக்கள் முழுமை பெறாமல் மக்களின் கருத்தைக் கேட்பது பொருத்தப்பாடுடையதல்ல.

அரசாங்கம் இதனை ஒரு மதிப்பீடாகக் கருதாமல் அரசியல் விளைவை எதிர்பார்த்தே நடத்தவிரும்புகிறது.

தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல. சரியான நேரத்தில்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் குறித்த முடிவை எடுப்பார்.

அமைச்சர் மங்கள சமரவீர - அமைச்சர் ஜி.எல்.பீரிஸை துரோகி என்றும், தாம் ஆட்சிக்கு வந்தால் அவரை நாட்டைவிட்டுத் துரத்துவோம் என்றும் கூறியது பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

## பொலிஸ் குழுவினர் மீது கல்முனையில் தாக்குதல்

மட்டு - கல்முனையில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்ட நான்கு பொலிஸார் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர். கல்முனை தாஹிம் வீதியில் நான்கு பேர் கொண்ட பொலிஸ்குழு ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது இனந்தெரியாத குழு அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட - பொலிஸ் பொறுப்பதிகாரி நிசாம், தாக்குதலின் பின்னணியில் புலிகள் இருந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.






திருமலையில் நடைபெறும் இசை, நடன, நாடக விழாவில் மூன்றாம் நாள் நிகழ்வில் கருத்துரையாற்றும் இராஜா தர்மராஜாவை முதற்படத்திலும், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், ஹம்சத்வனி பாஸ்கரன் குழுவினரின் இசைக்கச்சேரியை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# திருகோணமலை மண்ணை எவராலும் பறிக்க முடியாது!

## இசை, நடன, நாடக விழாவில் உரை

இந்தத் திருகோணமலை மண் எவராலும் பறிக்கப்பட முடியாதது. இங்கு எல்லா இனத்தவர்களும் கை கோர்த்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது தமிழர்களின் தலைநகர். இந்த மண் எமக்குச் சொந்தமானது. தமிழீழ மண்ணில் சிங்களவர்களும் வாழ்வதற்கு உரிமையுண்டு. இவ்வாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் இசை, நடன, நாடக விழா மானுடத்தின் தமிழ்க்கூடல் 2 நிகழ்வின் மூன்றாம் நாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வின் உரையரங்கிற்கு அனந்தராஜ் தலைமை வகித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில், மண்ணின் மகத்துவத்தை எடுத்துக்காட்ட வேண்டுமாயின் கலைகளை எடுத்துக்கூறவேண்டும். வெறும் பொழுதுபோக்குக்காக இவ்விழா நடத்தப்படவில்லை. தமிழ் மக்களுக்கு உரித்தான பூமி என்பதற்காக அடையாளப்படுத்த - பல லட்சக்கணக்கான ரூபா செலவில் கோணேசப் பெருமானின் ஊர்வலம் வருடாந்தம் நடத்தப்படுகின்றது. இந்த ஊர்வலம் உலகுக்கு எடுத்துக்காட்டப்படும் நிகழ்வாகும்.

தமிழர்கள் வாழும் மண்ணில் வேற்று இனத்தவர்கள் வாழலாம், தமது கலைகளை எடுத்துக்கூறலாம் என்பதற்காக இசை, நடன, நாடக விழாவில் சிங்களக் கலைஞர்களினதும் அளிக்கைகள் இரண்டு தினங்களுக்கு மேடையேற்றப்பட வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அருகிப்போகும் கலைகள் மீண்டும் புத்துயிர் கொடுக்கப்படவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் - தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன் சிறப்புரையையும், இராஜா தர்மராஜா கருத்துரையையும் ஆற்றினார்.

தொடர்ந்து - செல்வி ஹம்சத்வனி பாஸ்கரனின் இசைக்கச்சேரியும், மட்டக்களப்பு இசை நடன கல்லூரி மாணவர்களினது நடிப்பில் - ஷர்மிளா கொரெய்ராவின் தயாரிப்பில் எரிமலைகள் நாட்டிய நாடகமும், புதுவை அன்பனின் தயாரிப்பில் புரட்சிப் பறவைகளின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகமும் மேடையேற்றப்பட்டது. (04)

# அன்னை பூபதி நினைவாக மீசாலையில் சிரமதானம்!

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு - மீசாலை வணிகர் சங்கமும், மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்களும் இணைந்து- யுத்தத்தினால் சேதமடைந்த மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய பாடசாலைக் கட்டடங்களைச் சிரமதானம் செய்யும் பணி இரு தினங்களாக நடைபெற்றது.

அன்னை பூபதி நினைவுதினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சிரமதானத்தின் மூலம் பாடசாலையின் பெருமளவு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், தென்மராட்சி அனைத்துப் பகுதிகளிலும் அன்னை பூபதியின் நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சந்திகள்தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு, பந்தல்களில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளது. (25)

மக்கள் வங்கியின்
புத்தாண்டுப்பரிசு

- ரூபா 15,000/- பெறுமதியான மக்கள் வங்கியின் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல் சேமிப்புச் சான்றிதழ் ஒன்றினைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் வழமையாக வழங்கப்படும் கைவிசேடத்துடன் அழகிய மக்கள் வங்கி சின்னம் பொறிக்கப்பட்ட பெறுமதிமிக்க விளக்கொன்றையும் வழங்க மக்கள் வங்கி முன்வந்துள்ளது.
- ஜனஜய சேமிப்புக் கணக்குக்கு வழங்கப்படும் வட்டி வீதம் இச்சான்றிதழுக்கும் வழங்கப்படும்.
- இச்சான்றிதழ் 6 மாத முடிவில் முதிர்ச்சியுடையதாகும்.
- இச்சான்றிதழ் மக்கள் வங்கி ஜயஸ்ரீ என அழைக்கப்படும் மாபெரும் பரிசுத் திட்டத்திலும் இணைக்கப்பட்டுள்ளது.
- புத்தாண்டுத் தினத்தன்று சுபநேரத்தில் எம்முடன் கொடுக்கல் வாங்கல் செய்து உங்கள் வாழ்வை ஒளிமயமானதாக்கிக் கொள்ளுங்கள்.

உள்ளங்களும் இல்லங்களும் ஒளி பெறட்டும்

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

(சி-814)

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்



பெயர் : உ.கவிநிலவன்
முகவரி : 48, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

### மூன்றாவது அகவையில்

பெயர் : இ.கோபி
முகவரி : நெடியகாடு வடக்கு, வல்வெட்டித்துறை.



### மூன்றாவது அகவையில்



பெயர் : சி.கீர்த்திகா
முகவரி : ஊறணி குடியேற்றம், வல்வெட்டித்துறை.

### எட்டாவது அகவையில்

பெயர் : சி.துஷாந்தினி
முகவரி : சேமன் வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# வார்த்தை விளையாட்டு - 28

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | | 2 | | | |
| | 3 ச | | | | 4 பு |
| | | 5 மை | | | |
| | 6 | | 7 | | |
| | | | 8 ர | | |
| 9 | வு | | | | |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. விவசாயிகள் பயன்படுத்தும் ஒரு உபகரணம்.
3. திருகோணமலையிலுள்ள ஒரு கிராமம்.
5. நடுவில் உள்ள புள்ளி.
6. ஒருவகைப்பயிர்/ கட்டுவதற்கு உதவும். நூலும் இப்படியே சொல்லப்படும்.
8. வகை (குழம்பியுள்ளது)
9. தும்பு போன்ற இலையுடைய ஒரு மரம்.

### மேலிருந்து கீழ்

1. கிழங்கு வகை.
2. சூடு.
3. சிறிய சண்டை.
4. நூல்.
7. வாயினால் எழுப்பப்படுவது. (தலை கீழாக)



## வார்த்தை விளையாட்டு - 27 இன் விடைகள

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. அமெரிக்கா | 1. அலரி மாளிகை |
| 3. லஞ்சம் | 2. காலாற்படை |
| 5. பற்று | 4. சஞ்சலம் |
| 6. மாசி | 7. சிறிது |
| 8. சமீபம் | 9. வடை |
| 10. கைது | |
| 11. வரி | |

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 16-04-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 27

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**சொ.மயூரன்**
பூதராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

*2 ஆம் பரிசு -*
**ப.ஹரிகரன்**
40/2, கலைமகள் வீதி,
அரியாலை.

*3 ஆம் பரிசு -*
**சி.மதீசன்**
கைதடி வடக்கு, கைதடி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## கழுதையும் பன்றியும்

ஒரு ஊரில் பண்ணையார் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கழுதையையும், வெள்ளைப் பன்றியையும் வேலைக்கு வைத்திருந்தார்.

கழுதை வஞ்சக குணமுடையது. ஆனால், பன்றிக்கு நல்ல மனசு. நன்றாக உழைக்கும். ஒருநாள் பன்றி எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுக் கை, கால்களைக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தது. ஆனால் கழுதையோ, பண்ணையார் வருவதைப் பார்த்து, மண்ணில் உருண்டு புரண்டு, வேலை செய்வதுபோல் நடித்தது. பண்ணையார் - கழுதை நன்றாக வேலை செய்கிறது



என்று நினைத்து, கழுதைக்குப் புரியாணியும், பன்றிக்குப் பழைய சோறும் போட்டார்.

ஒருநாள் பண்ணையார் முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல், திடீரென்று தன் வயல்களைச் சுற்றிப் பார்க்க வந்தார். அப்போது கழுதை படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. பன்றி வியர்வை சொட்டச்சொட்ட அருமையாக வேலை செய்து கொண்டு இருந்தது.

உண்மையை உணர்ந்துகொண்ட பண்ணையார் கழுதையை அடித்து விரட்டிவிட்டுப் பன்றியிடம் அன்பாக இருந்தார்.

## பாதுகாப்பான இல்லம்

நன்றி - ரிங்கிள் அங்கம் 2



# உங்கள் கைவண்ணம்



து.விதுஷன்,
தரம் - 4,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.



சு.நர்மதன்,
தரம் - 8,
யாழ். மத்திய கல்லூரி.

## விடுகதைகள்

1. குடு குடு கிழவன் குடிலைத் தூக்கிக்கொண்டு போகிறான். அவன் யார்?
2. பிறப்பு வாலுடன், இறப்பு காலுடன். அது என்ன?
3. சின்னச் சிமிழ் சித்திரம் வட்டத்தில் ஊர்ந்து ஓடும். உயிர் இல்லை. அது என்ன?
4. உத்தரவு இல்லாமல் ஊசியால் குத்துவான். அவன் யார்?
5. உயிர் இல்லாக் குதிரை இரவு பகல் சவாரி செய்யலாம். அது என்ன?
6. பார்க்கும் இடம் எல்லாம் முத்து. விடிந்தால் ஒன்றும் இல்லை. அது என்ன?

## விடைகள்

1. நத்தை
2. தவளை
3. மணிக்கூடு
4. நுளம்பு
5. செருப்பு
6. விடிவெள்ளி

றோ.மேரி அஞ்சலீனா,
தரம் 3
யாழ். வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

## பிறநாட்டவர் இலங்கைக்கு இட்ட பெயர்

1. கிரேக்கர் - தப்ரபேன்
2. ஆரியர்கள் - தாமிரப்பரணி
3. இந்தியர் - சீலியதீப
4. அரேபியர் - செரண்டிப்
5. சீனர் - சீலன்
6. போர்த்துக்கேயர் - செயிலான்
7. ஒல்லாந்தர் - சிலோன்
8. ஆங்கிலேயர் - சிலோன்

அ.ஜனார்த்தனி
ஆண்டு - 8
யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## பூக்கள்

பூவே உன்னைப் படைத்தது யார்?
புதுமணம் உள்ளே வைத்தவர் யார்?
பஞ்சு போன்ற உன் உடலை
பல வகையாகப் படைத்தவர் யார்?

மங்கல காரியம் என்றாலே
மாதுவின் தலையில் நீ இருப்பாய்
விழாக்கள் கோயிலிலே வந்தாலே
விஸ்னு பாதத்தில் நீ இருப்பாய்

ஐந்திதழ், ஆறிதழ் உன் இயல்பை
ஐக்கியமாகத் தந்தது யார்?
இயற்கை அன்னை தந்ததுவோ
இவை இறைவன் படைப்பன்றோ.

ச.சோசினி,
தரம் - 10,
கிளி/புனித. திரேசா பெண்கள் கல்லூரி.

## உலக அதிசயங்கள்



3.ஜுயுஸ் சிலை (THE STATUE OF ZEUS AT OLYMBIA)

கி.மு 463 இல் கிறீக் சிற்பி ஃபீடியாஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. பளிங்குக் கற்களால் செய்யப்பட்ட இந்தச் சிலை யானைத் தந்தம் மற்றும் தங்கத்தால் முலாமிடப்பட்டிருந்தது.

40 அடி உயரமான இச்சிலை கி.பி 6 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியால் கீழே விழுந்ததையடுத்து கொன்ஸ்தாந்திநோபிளுக்கு கொண்டுசெல்லப்பட்டது. காலச்சுழற்சியில் இந்த அதிசயம் அழிந்துவிட்டது.

(தொடரும்)

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சி.அஜீத்
கற்கும் பாடசாலை :- யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, கதை படித்தல், சித்திரம், முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :- க.அஷோக்
கற்கும் பாடசாலை :- யா/இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட், முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :- ஸ்ரீ.சம்ஷிகா
கற்கும் பாடசாலை :- யா/இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் : சதுரங்கம், கதை வாசித்தல்.



முழுப்பெயர் :- ந.அனுஷா
கற்கும் பாடசாலை :- யா/வரணி மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- சு.நர்மதன்
கற்கும் பாடசாலை :- யா/மத்திய கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :- சித்திரம் வரைதல், கவிதை எழுதுதல்.

முழுப்பெயர்:- ச.காயத்திரிதேவி
கற்கும் பாடசாலை :- யா/இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- ஆங்கிலம், பத்திரிகை வாசித்தல், கல்வித்துறை.

முழுப்பெயர்:- செ.ஸ்ரீநிசாந்
கற்கும் பாடசாலை :- யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- கல்வித்துறை, கிரிக்கெட், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- த.நிசாந்தன்
கற்கும் பாடசாலை :- கிளி / பளை மத்திய கல்லரி
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், ரீ.வி. பார்த்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................

.................... திகதி
.................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
.................... பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்*
*சாந்துணையும் கல்லாத ஆறு.*

*- திருக்குறள்.*

## நமது நோக்கு

### உலக மொழியைத் தோழமையாக்கிக் கொள்ள...!

அண்மையில் வெளியாகிய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் - யாழ். மாவட்டத்திலிருந்து பரவலாக சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளதுடன், உயர்தரம் பயிலுவதற்கான தகுதியைப் பெற்றிருப்போரும் பாராட்டத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர்.

ஆனால் - வெளியான பெறுபேறுகளை, பாடங்கள் ரீதியாக நோக்கின், ஆங்கிலத்தில் சித்திபெறும் மாணவர்களின் எண்ணிக்கை கவலை தருமளவுக்கு உள்ளதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆங்கிலப் பாடத்தில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியானது இம்முறை மாத்திரத்திற்கே உரியதெனக் கொள்ள முடியாது.

கடந்த பல வருடங்களாகவே - தமிழ் மாணவர்கள் மத்தியில், ஆங்கிலத்தில் போதிய சித்தி பெறுபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிப் போக்கிலேயே சென்று கொண்டிருப்பதை கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாணவரிடையே - ஆங்கில பாடத்தில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியும், பின்னடைவும் வெறுமனே ஒதுக்கி விடக்கூடியதல்ல.

ஏனெனில் - இப்போதும் சரி, இனிவரும் காலத்திலும் சரி - ஆங்கிலம், உயர்கல்வி ரீதியாக முக்கியமான இடத்தை வகிக்கும் நிலையே காணப்படுகின்றது.

உயர்கல்வி முயற்சிகள் - 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதான' நிலையிலிருந்து - உலகளாவிய தொழில்சார் தகைமைக்குரியனவாகும் தேவை அத்தியாவசியமாகிவிட்டபோது ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியின்மையானது - உயர் கல்விக்கான வாய்ப்புக்களையும், அதனூடான எதிர்காலத்தையும் பெரிதும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

பல்கலைக்கழகக் கல்வியிலும் சரி, அதன் பின்னராக பட்டமேற்படிப்புக்களாயினும் சரி - ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியின்மையால் அரிய பல வாய்ப்புக்களை இழந்தவர்கள் எம்மில் பலருளர்.

தொழில்சார் தகைமையை வளர்த்துக் கொள்வதிலும், முன்னேறிவரும் உலகார்ந்த வேகத்திற்கு ஈடுகொடுப்பதிலும் - இந்தத் தாக்கம் - எமது மண்ணிலிருந்து உருவாகும் கல்வியார்வம் மிக்க பல மாணவர்களையும் நேரடியாகவே பாதித்திருப்பதை கண்கூடான உதாரணங்கள் மூலம் அறியமுடியும்.

இவ்வாறானதொரு சூழலில் - ஆங்கிலக் கல்விக்கான அடித்தளத்தை க.பொ.த சாதாரண தரக் கல்வியே வழங்கிவரும்போது - அதில் போதிய தேர்ச்சிபெறாமல் விடுவது - தொடர்ச்சியான, பின்னடைவான விளைவுகளையே தருமென்பதில் ஐயமில்லை.

எனவே - கல்வியாளர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் - ஆங்கிலக் கல்வியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் எழுந்திருப்பதை உணர்ந்து - அது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

சாதாரண தர மட்டத்திலேயே ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு, அதில் திருப்தியான பெறுபேறுகள் கிடைத்திராதபோது - ஆங்கிலத்தைக் கற்றல் மொழியாக - ஆங்கிலவழிக் கல்வியை அறிமுகப்படுத்துவது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியப்பாடானது, வெற்றியைத் தரக்கூடியது என்பதும் இங்கு ஆழமான ஆய்விற்குரியதாகிறது.

எனவே - கல்வித்திட்டங்களை வடிவமைப்பவர்களும், செயற்படுத்துபவர்களும் - இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு - ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும். ஆங்கிலத்தை மாணவரிடையே வளர்த்தெடுப்பதில், அவர்களைப் புலமையாளர்களாக மாற்றுவதில் - யதார்த்தமான, சாத்தியப்பாடு மிக்க, நல்ல விளைவுகளைத் தரக்கூடியதான வழிமுறைகள் காணப்பட வேண்டியது உடனடித்தேவை என்பதை அவர்கள் உணர வேண்டும்.

# தேவை மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்புப் பணிகள் பூர்த்தி!

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான தேவை மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் பணிகள் முழுமையடைந்து விட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் ஆறு இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இந்தப் புனரமைப்பு வேலைததிட்டங்களில் சிறான், யு.என்.டி.பி, சர்வ தேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன மேற்கொள்ளவுள்ளன.

வட - கிழக்குப் பகுதிகளில் அழிந்துள்ள பாடசாலைகள், வீடுகள், வீதிகள், உட்கட்டமைப்பு வசதிகளுக்கு இந்தத் தேவை மதிப்பீட்டு அறிக்கையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத்தேவை மதிப்பீட்டுப் பணிகளை அரசாங்கமும், புலிகளும் இணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# ஊடகத்துறை அமைச்சை கையேற்பதற்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் குழு ஆராயும்

ஊடகத்துறை அமைச்சைக் கையேற்பது குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சிரேஷ்ட ஊடகவியலாளர்களைக்கொண்ட குழுவொன்றை அமைக்கவுள்ளதாக அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி சந்திரிகா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். இந்தியாவிலிருந்து திரும்பியதும் இதுகுறித்த இறுதித் தீர்மானத்தை அவர் எடுப்பார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஊடக அமைச்சைக் கையேற்பது பற்றி நியாயபூர்வமாக ஆராயவே இக்குழு அமைக்கப்படவுள்ளது. இந்தக் குழுவினர், அரச ஊடகங்கள், பொ.ஐ.மு பற்றியும், ஜனாதிபதி பற்றியும், வெளியிடும் செய்திகள் குறித்தும், கருத்துத் திரிபுகள் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளது.

மூன்று மாதத்துக்குள் அறிக்கையைத் தயார் செய்து இந்தக் குழுவினர் - ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிப்பர். இந்தக் குழுவில் இடம்பெறும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பற்றிய விபரங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், ஜனாதிபதியே அந்தப் பட்டியலை இறுதி முடிவு செய்வார் எனவும் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, உள்துறை அமைசசும் சரியாகச் செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதிக்குக் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிர்வாண நிலையில் யுவதி காலிமுகத்திடலில் கைது!

## ஜேர்மனியில் இருந்து சிகிச்சைக்கு வந்தவர்

கொழும்பு காலிமுகத்திடலில், ஜனாதிபதி செயலகத்துக்கு அண்மையில் உள்ள இடமொன்றில் ஜேர்மனி யுவதி ஒருவர் நிர்வாண நிலையில் இருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசியும், 2 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கல் போன்ற ஆபரணங்களும், வெளிநாட்டுப் பண நோட்டுக்களும், 15 ஆயிரம் ரூபா பெறுமதியான இலங்கைப் பணமும் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

ஜேர்மனியில் இருந்து வைத்தியம் செய்வதற்காக இங்கு வந்ததாகவும், இங்கும் நோய்க்குப் பரிகாரம் காண முடியாது இருப்பதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார். பின்னர் அவர் கோட்டைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

# சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 13 பேர் கைது

(கொழும்பு)

நுரைச்சோலைக் கடற்பகுதியூடாகச் சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குச் செல்ல முயன்ற 42 பேர் கொண்ட குழுவைக் கண்டுபிடிக்கும் பொருட்டு விசேட தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட 13 பேர் கைது செய்யப்பட்ட பின்னர் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே ஏனையோரைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபாகளிடமிருந்து கடற் பயணத்திற்கான வரைபடங்கள் உட்பட பல ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள்- நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



கிளிநொச்சியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடல் நடத்த வந்த யு.என்.டி.பி உயரதிகாரியை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வரவேற்பதை முதலாவது படத்திலும், பேச்சு நடாத்தும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யு.என்.டி.பி. அதிகாரிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.



# குறைதீர் மன்றம்

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து மீள்குடியேற்றத்துக்காக யாழ். வந்துள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு, மீள்குடியேற்றப் பணமாக 25000 ரூபா இன்னமும் வழங்கப்படவில்லை. இதுதொடர்பாக யாழ். பிரதேச செயலர் கவனம் எடுத்து, குறிப்பிட்ட பணம் கிடைக்க ஆவன செய்யவேண்டும் அல்லது தவறும் பட்சத்தில் பிரதேச செயலகத்துக்கு முன்னால் மிகவிரைவில் உண்ணாவிரதம் இருப்போம்.

**யாழ். முஸ்லிம் பொது அமைப்புக்கள் குழு**

தங்களது 08.04.2003 ஆம் திகதி கடிதம் தொடர்பாக நாம் யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டபோது, யாழ். பிரதேசசெயலர் பிரிவில் 2338 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளதாகவும், இவர்களில் 314 பேரிடம் மீள்குடியேற்றப் பணத்திற்கான கையொப்பம் பெறப்பட்டுள்ளதாகவும் - இப்பட்டியலில் 27 முஸ்லிம் குடும்பங்களும் அடங்கியுள்ளதாகவும், இந்த முஸ்லிம் குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு, கையொப்பம் பெறப்பட்டு- அவர்களுக்கான பணம் நிக்கொட் மூலம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் செயலக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு, மிகவிரைவில் ஏனைய 20 முஸ்லிம் குடும்பங்களுக்குமான கொடுப்பனவுகள் மிகவிரைவிலேயே வழங்கப்படவுள்ளதாகவும் செயலகத்திலுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்திய நாடாளுமன்ற தீர்மானத்தினால்

# அமெரிக்க - இந்திய உறவு பாதிக்குமா?

ஈராக் போர் முடிந்துவிட்டதாகவும், சதாம் ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டதாகவும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஊடகங்கள் உலகத்துக்குச் செய்தி வழங்கிக்கொண்டிருக்கின்றன, சதாம் எங்கு? உயிருடன் இருக்கின்றரா? என்பதெல்லாம் அமெரிக்க உளவுத்



துறையினருக்குப் பெரும் தலைவலியான நிகழ்வாக மாறியுள்ளது. இதனால் போர் முடிவுக்கு வந்துவிட்டதாக யாரும் எடுத்த எடுப்பில் கூறிவிடமுடியாது. அது மட்டுமல்ல- போர் தொடர்பான பக்கச்சார்பற்ற ஊடகத்துறைகளை இலக்குவைத்து அமெரிக்கப்படைகள் தாக்குதல் நடாத்திய பின்பு, உண்மைத் தகவல்களை யாரும் வெளிப்படுத்தவில்லை என்றே கூறலாம். இதனால், பக்தாத் நகரத்துக்குள் எத்தகைய நிகழ்வுகள் நடக்கின்றது என்பதற்குச் சரியான ஆதாரம் எதுவுமில்லாதுள்ளது என்பதனை இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். எதுவாயினும், போர் ஓய்ந்த நிலையில் உலகின் முன்னணி அரசுகள் பல ஈராக்குக்கு - எதிரான போரை நிராகரித்ததுபோன்று காலம் தாழ்த்தி இந்தியா இப்போரை கண்டித்துள்ளது. இதனை விரிவாக இவ்வாரம் நோக்குவோம்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரதீய ஜனதா அரசாங்கம் பல மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. ராஜீவ்காந்தி, இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின்பு ஆட்சிக்கு வந்த முதற்காலப் பகுதியில் ஏற்படுத்திக்கொண்ட வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைகளைப் பாரதீய ஜனதாக்கட்சி பின்பற்றி வருகிறது. அதனடிப்படையில் அமெரிக்காவுடனான நெருக்கம் இந்தியாவுக்கு முதன்மையானதாக திகழ்ந்தது. ஏனெனில் அமெரிக்காவை அரவணைத்து, இப்பிராந்தியத்தில் சீனாவும் தனது வழமையான விரோதியாகத் திகழ்ந்த பாகிஸ்தானும் இந்தியாவைவிட முன்னணியிலும், இநதியாவுக்கு நிகராகவும் எழுச்சிபெற்றுள்ளன. எனவே, இந்திய - அமெரிக்க நெருக்கம் மிகமுக்கியம் வகிப்பதாகப் பாரதீய ஜனதா கருதுவதும், அதற்கேற்ற வகையில் புதிய உலக அரசியல் ஒழுங்கு காணப்படுவதும், அந்நெருக்கத்தை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. இதனால், வளர்ச்சியடைந்து வந்த இந்திய - அமெரிக்க உறவு ஈராக் விவகாரத்தால் பாதிக்கப்பட்டுவிடுமோ எணப் பாரதீய ஜனதா கருதுகின்றது.

ஈராக் போருக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் உருவாக்கிய நெருக்கடிகளைக் கடந்தவாரம் நிகழ்ந்த லோக்சபா கூட்டத்தொடரை அவதானித்திருந்தால் தெரிந்திருக்கும். இரண்டு நாட்கள் ஒத்திப்போடப்பட்ட நிலையிலேயே ஒரு தீர்மானம் எட்டப்பட்டது. தீர்மானம் நிறைவுபெற்ற பின்பு, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா குறிப்பிடும்போது - அமெரிக்கா - இந்திய உறவை இத்தீர்மானம் பாதிக்காது என்றார். இது மிக வேடிக்கையான அறிவித்தலாக அமைந்திருந்தது. அதுமட்டுமல்ல பாரதீய ஜனதாக்கட்சியினர் - அமெரிக்காவைக் கண்டிப்பதில் அவதானமாக நடந்துகொண்டதுடன், அமெரிக்க எதிர்ப்புவாதத்தைப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ பெர்ணாண்டஸ் அதிகதடவை வெளிப்படுத்தியிருந்ததுடன், அவர் பாரதீய ஜனதாக்கட்சியைச் சாராதவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாரதீய ஜனதாக் கட்சியினர் - பாகிஸ்தானைப பொறுத்தே தமது வெளிநாட்டுக் கொள்கைகளின் வெளிப்பாட்டைக் கொண்டிருந்தார்கள் என்பதும் - பாகிஸ்தான் விடயத்தில் அமெரிக்காவின் போக்கைக் கண்டித்திருந்தார்கள் என்பதும் நினைவுகூரத்தக்கது. பாகிஸ்தானைத் தவிர்த்த நிலையில் பாரதீய ஜனதாக்கட்சியினர் - அமெரிக்காவை ஒருபோதும் கண்டிக்கவில்லை. ஆனால், தற்போதைய எதிர்க்கட்சிகளின் நெருக்கடியால் ஏற்பட்ட தீர்மானத்தைக் காலம்தாழ்த்தியும், ஆரம்பத்தில் எதிர்த்ததையும் கொண்டு, பாரதீய ஜனதாவின் போக்கை அமெரிக்காவுக்கு வெளிப்படுத்திவிட்டது. வெளிப்படையாக எதிர்ப்பைத் தெரியப்படுத்தினாலும், உள்ளூர அமெரிக்காவின் நண்பன் என்பதனைப் பாரதீய ஜனதா காட்டிவிட்டது.

பாரதீய ஜனதா அரசாங்கம் இந்துத்துவக்கொள்கையைக் கொண்டிருப்பதுடன், இஸ்லாத்துக்கு எதிரான - பாகிஸ்தானுக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றுவதைக் காணமுடிகின்றது. அமெரிக்காவின் இஸ்லாத்துக்கு எதிரான கொள்கையும், அதாவது பயங்கரவாதம் என்ற பொதுமைப்படுத்தப்பட்ட கொள்கைக்கும், இந்தியாவின் இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்திற்கும் இடையில் பொதுமையும், ஒருமைப்பாடும் தென்படுகின்றது. இஸ்லாமியரை எதிரிகளாக நோக்குகின்றநிலையில் இந்தியாவும், அமெரிக்காவும் ஒன்றாகவே விளங்குகின்றன. அதனடிப்படையில், இரு அரசுகளது உறவும் நெருக்கமானவையே. பாரதீய ஜனதா பல தடவை அமெரிக்க எதிர்ப்புவாதத்தினை வெளிப்படுத்தினாலும் அல்லது வெளிப்படுத்துவது போன்று காட்டினாலும், இரு அரசுகளுக்குமான உறவு சுமுகமான நிலையிலேயே விளங்குகிறது.

அமெரிக்கா - இந்தியாவிலும், இந்தியா - அமெரிக்காவிலும் பரஸ்பரம் தங்கியிருக்கின்றன. அமெரிக்காவை விட இந்தியா பலமடங்கு பலவீனமான அரசாக விளங்கியபோதும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் காணப்படும் கொதிநிலையும், ஆசியாவின் உபபிராந்தியங்களில் காணப்படும் அசௌகரியமான சூழலாலும்



வாஜ்பாய் - அத்வானி

அமெரிக்க நலன்பேணப்பட வேண்டியதேவை ஏற்பட்டுள்ளது. ஆசியாவை முதன்மைப்படுத்துவதனால், இந்தியாவை அணைத்துக் கொடுக்கும் கொள்கையை நீண்டகாலமாக அமெரிக்கா நிலைநாட்டி வருகின்றது. ஏனெனில், சீனாவுடனான பகையை முடிப்பதற்கு இந்தியாவின் நட்பு மிக உறுதியானதாக அமெரிக்காவுக்கு விளங்குகின்றது. இதனால், இந்தியாவை அணைப்பதும், பாகிஸ்தானை தட்டிக் கொடுப்பதுமாக அமெரிக்கா நடந்துகொள்கின்றது. இப்பிராந்தியத்தில் மிகப்பலமான சக்தியான சீனாவைக் கையாளமுயலும் அமெரிக்கா, இந்தியாவின் நட்பினைப் பேணுவதுபோன்று பாகிஸ்தானையும் நகர்த்த விரும்புகின்றது. இதிலேயே இந்தியாவுக்கு அமெரிக்கா மீது அதிக வெறுப்புண்டு. ஈராக் விவகாரம் - மூர்க்கத்தனமான எதிரியை முறியடித்துவிட்டதுடன், இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் நீண்டகால எதிரி தோற்கடிக்கப்பட்டுவிட்டதென்றநிலை புஷ் நிர்வாகத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. இது இஸ்லாமியரின் ஐக்கியத்தினைச் சாத்தியப்படுத்த முடியாதநிலையை உருவாக்கியுள்ளதுடன், இறைமைக்குப் புதிய அர்த்தமும், அரசுகளுக்கு மாறுபட்ட எல்லை நிர்ணயத்தையும் அமெரிக்கா கொடுத்துள்ளது. ஈராக் வரிசையில் ஈரான், சிரியா போன்ற அரசுகளுக்கு உடனடியான விளைவுகளும், பலமான இஸ்லாமிய அரசுகளுக்கு நீண்டகால எச்சரிக்கையையும் அமெரிக்க, பிரிட்டிஷ் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இதன் தாக்கமும் விளைவுகளும் இனிவரும் அரசியல் வரலாற்றில் ஏற்படப்போகும் மாற்றங்களுக்கு அடிப்படையாகும். இதில் இந்திய - அமெரிக்க நெருக்கமும் அதன் தொடர்ச்சியான பாரதீய ஜனதா கட்சியின் அரசியலும் விதிவிலக்கானவை அல்ல. பாரதீய ஜனதாக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை மதிப்பீடு செய்த **Achin Vanaik** என்பவர் 1998 இற்குப் பிந்திய வெளிநாட்டுக் கொள்கையில் அணுவாயுதப் பரிசோதனை

**கே.ரி.கணேசலிங்கம்**

மட்டுமே வெற்றிகரமான நிகழ்வு என்றும், ஏனையவை தோற்றுப்போன வரலாற்றையே ஏற்படுத்தியதென்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். அமெரிக்க சார்புக்கொள்கை, இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு மீண்டுமொரு அத்தியாயத்தை உருவாக்குமா என்பதே அடுத்தகட்ட சந்தேகமாக மாறியுள்ளது. வொஷிங்ரன் மாநாட்டில் இந்திய - அமெரிக்க நெருக்கம் பிராந்திய அரசியலில் மாறுதலுக்கு வழிவகுக்க வாய்ப்புகள் உள்ளதுபோல் தெரிகின்றது.

# மறைந்தாலும் எம்முடன் வாழும் கொழும்புத்துறை யோகர் சுவாமி



யோகர் சுவாமிகள்

யாழ்ப்பாணப் பெரியகடை என்ற பகுதியில், பிறருக்குப் பித்தனாகக் காட்சியளித்த கடைச்சாமி என்று ஒருவர் வாழ்ந்ததாக வரலாறு எடுத்து

## யோகர் சுவாமிகளின் குருபூசை இன்றாகும்

ரைக்கும். வாயில் வெற்றிலை வழிந்தபடி அழுக்குப்படிந்த மேனியோடு, கிழிந்த வேட்டியுடன் அப்பகுதியில் அவர் காட்சியளித்தார். இவரைப் பைத்தியம் என்று பலர் ஒதுக்கியதுமுண்டு. இவர் பைத்தியம்போல் காட்சியளித்தாலும், உண்மையில் இவர் ஒரு ஞானி என்று கருதியோரும் சிலரிருந்தனர். எனினும், கடைச்சாமியாரின் வரலாறு சுவைமிக்க வரலாறு. கடைச்சாமியாரால் ஆட்கொள்ளப்பட்டவர்தான் நல்லூர் தேரடியில் காட்சியளித்த "விசர்ச் செல்லப்பா" ஆவார். விசரராகக் காட்சியளித்த செல்லப்பாவின் உண்மை நிலையை உணர்ந்தோர் அவரை "விசர்ச் செல்லப்பா அடிகள்" என்றே அழைத்தனர்.

நல்லூர்த் தேரடியில் காணப்பட்ட விசர்ச் செல்லப்பாவால் ஆட்கொள்ளப்பட்டவர் நம் கொழும்புத்துறை "யோகர் சுவாமிகள்" ஆவர். இவருக்குக் கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்துக்கொடுப்பதற்கு முன்பு அவ்வாச்சிரமத்துக்குப் பக்கத்தில் உள்ள இலுப்பை மரத்தின் கீழ் இவர் தஞ்சம் புகுந்திருந்ததனால், இவரை "இலுப்பையடிச் சாமியார்" என்றும் அழைத்தனர்.

நல்லூர்த் தேரடியில் காணப்பட்ட "விசர்ச் செல்லப்பா"வினால் ஆட்கொள்ளப்பட்டவர் நம் யோகர்சுவாமிகள். இந்த விசர்ச் செல்லப்பா எப்படித் தன்னை ஆட்கொண்டார் என்பதை யோகர்சுவாமிகள் "எங்கள் குருநாதர்" என்ற தலைப்பில் 10 பாடல்களில், எளிய தமிழில், ஏற்றமிக்க சொல்லாட்சியோடு, பக்திச்சுவை நனிசொட்ட எமக்கு உவந்தளித்துள்ளார். அவர் பாடிய பாடல் அனைத்தையும் இங்கு கையாள முடியாது. எனவே, அவர் உள்ளம் உருகப் பாடிய முதற்பாடலை மட்டும் வாசகர்கள் துய்ந்து மகிழ்கின்ற முறையில் இங்கு எடுத்தாளப்படுகின்றது.

*"என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்*
*இணையடி என் தலை வைத்தான் எங்கள் குருநாதன்*
*அவனி எல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்*
*முன்னை வினை நீக்கி விட்டான் எங்கள் குருநாதன்*
*மூவருக்கு அறிய ஒண்ணா எங்கள் குருநாதன்*
*நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்*
*நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்"* என்றார்.

தன் வாழ்நாள் முழுதும் கொழும்புத்துறையிலேயே வாழ்ந்ததனால் "கொழும்புத்துறை யோகர்சுவாமிகள்" என்று இவர் அழைக்கப்பட்டார். இவரோ, நல்லூர் தேரடியில் வாழ்ந்த செல்லப்பரால் ஆட்கொள்ளப்பட்டவர். ஆனால், இவரின் பிறப்பிடம் மாவிட்டபுரம். தந்தையின் பெயர் அம்பலவாணர். தாயார் பெயர் சின்னாச்சி அம்மை. மாவிட்டபுரம் இவரைப் பெற்றெடுக்க, நல்லூர் இவரை ஆட்கொள்ள, கொழும்புத்துறையிலேயே தன் முழு வாழ்நாளைக் கழித்து அனைத்துலகுக்கும் அருளை அள்ளி வழங்கினார். இவர் 1873 ஆம் ஆண்டு பிறந்து 1964 இல் தனது 91 ஆவது ஆண்டில் தன் வாழ்வைத் துறந்தார்.

அவர் மறைந்து 30 ஆண்டுகள் உருண்டோடிலும் அவர் எம்மோடு வாழ்கின்றார்.

**மா.க.ஈழவேந்தன்**

# ஆங்கிலக் கல்வி போதனைத் திட்டம் ஆசிரியர் பற்றாக்குறையால் பாதிப்பு!

(கொழும்பு)

ஆங்கில வழிக்கல்வி முறையை அமுல் செய்யும் கல்வி அமைச்சின் திட்டம் - போதிய ஆசிரியர் வளம் இல்லாமையால், பின்னடைவைச் சந்தித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழிமூலம் கல்வி கற்பிக்கும் திட்டத்துக்கு - ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் போதாமல் உள்ளதால், திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கல்வி அமைச்சு சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றது.

ஆனாலும், படிப்படியாக நாடு முழுவதிலும் ஆங்கில வழிக்கல்வி முறையை அமுல்படுத்துவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது நாடுமுழுவதும் 168 பாடசாலைகளில் ஆங்கில வழிக்கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வியியற் கல்லூரிகள் மூலம் இத்திட்டத்துக்குத் தேவையான ஆசிரியர்களை உள்வாங்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(லி)

# ஹோட்டல் கற்கை நெறியில் ஆர்வம் காட்டவேண்டும்

## கருத்தரங்கில் உரை

(யாழ்ப்பாணம்)

ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்ப்பாண ஹோட்டல் பாடசாலை அதிபர் கதிகாமலிங்கம் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தில் மாணவர்கள் இக்கற்கை நெறிமூலம் நல்ல பலன்களைப் பெறலாம். இன்று சர்வதேச ரீதியில் இக்கற்கை நெறி பயின்றோர் பெருமளவு வேலை வாய்ப்பினைப் பெற்று வருகின்றனர். இக்கல்விநெறியைப் பயில க.பொ.த.சாதாரண தர கல்வித் தகைமை போதுமானது. எனவே, கூடிய மாணவர்கள் இக்கல்வியைக் கற்றுக் கொள்ளக்கூடிய நிலையுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதன் வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும். இங்குள்ள மாணவர்களும் அதிகளவில் பயிற்சியில் ஈடுபட்டுப் பயன்பெற வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வீரமணி ஐயர், வணபிதா வசந்தசீலன் ஆகியோரும் பெருமளவு பெற்றோர்களும் பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ரா)

# ஈராக் போர்க்களம்



வட ஈராக்கைக் கைப்பற்றிய பிரித்தானியப் படைகள் எண்ணெய் ஆலையொன்றைச் சூழ்ந்துகொள்கின்றன,



ஈராக்கின் மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து ரிக்கும் பலஸ்தீனத் தற்கொலைப் போராளி ஒருவர்.



அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து பிரேஸிலில் நடைபெற்ற பேரணிக்கு தனது கழுதையுடன் செல்லும் ஆர்ப்பாட்டக்காரர்.



மோட்டார் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 வயதுச் சிறுவனின் உடல் பாக்தாத் வைத்தியசாலையில் ஊழியர்களினால் புதைக்கப்படுகின்றது.

# 'விடுதலை நோக்கி' என்னும் பெயரில் அமெ.-பிரிட்டிஷ் தொலைக்காட்சி சேவை

## அமெரிக்க விமானத்திலிருந்து ஈராக் மக்களுக்கு ஒளிபரப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரும் - ஈராக்கிய மக்களுக்கான விசேட உரைகளை விடுத்துள்ளனர்.

ஈராக்கில் இந்த நாடுகள் ஆரம்பித்திருக்கும் 'விடுதலையை நோக்கி' (TOWARDS FREEDOM) என்ற புதிய தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை வழியே இந்த உரைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் புதிய தொலைக்காட்சிச் சேவை, சதாமின் ஆதிக்கத்திலிருந்து மக்களை முழுமையாக வெளியே கொண்டுவர உதவும் என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் பேச்சாளர் லண்டனில் கூறினார்.

இந்தத் தொலைக்காட்சி சேவையானது அமெரிக்காவின் 'கொமாண் டோ சோலோ' என்ற பாரிய துருப்புக்காவி விமானத்திலிருந்தே ஒளிபரப்பப்படுகின்றது.

நாளொன்றுக்கு 80 சதவீதமான நிகழ்ச்சிகள் அமெரிக்கத் தயாரிப்பு நிகழ்ச்சிகளாகவும், ஒரு மணி நேரத்திற்கு பிரிட்டிஷ் நிகழ்ச்சிகளும் இந்த தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளன.

கொள்ளையடிக்கப்படும் பொருட்கள்



# அமெரிக்காவின் அடுத்த இலக்கு வடகொரியா மீதான தாக்குதல்!

## எதிர்கொள்ளத் தயாராகிறது அந்நாடு

ஈராக் மீதான அமெரிக்காவின் போர் இலக்கு முடிவுக்கு வந்திருப்பதைத் தொடர்ந்து அமெரிக்காவின் அடுத்த இலக்காக வட கொரியா மாறலாமென்பதை, வடகொரிய அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

வடகொரியாவின் முக்கிய தலைவரான கிம் ஜோங்-கில், தாம் எத்தகைய எதிரிகளைச் சந்திக்கவும் சவால்களை எதிர்கொள்ளவும் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

உலகவலம்

இதேவேளை- ஐநாவுக்கான வட கொரியாவின் பிரதித் தூதுவர் ஹான் ஸோங்- ரியோல் அமெரிக்காவில் பேசும்போது- ஈராக் மீதான தாக்குதல் முடிவடைந்ததன் பின்னர்- எத்தகைய அமெரிக்கத் தாக்குதலையும் எதிர்கொள்ளக்கூடிய நிலையில் தனது நாடு இருப்பதாகத் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் தாம் இருதரப்பு பேச்சுக்களை நடாத்தவும் தயாராக விருப்பதாக அவர் கூறினார்.

ஆனால்- வொஷிங்ரன் நிர்வாகம்- சீனா, ரஷ்யா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளடங்கிய பன்னாட்டுப் பேச்சுவார்த்தையையே வடகொரியாவுடன் மேற்கொள்ள விரும்புவது குறிப்பிடத்தக்கது.

கிம் ஜோங்- கில் தனது தளபதிகள் புடைசூழ



# குற்றச்செயல்களை கட்டுப்படுத்த முடியாது பஸ்ராவில் பிரிட்டிஷ் படைகள் திணறல்!



(பக்தாத்)

ஈராக்கில் பஸ்ரா நகரின் அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றுவதற்காக பிரிட்டிஷ் துருப்புக்கள் முயற்சி செய்துகொண்டிருக்கும் அதேவேளை, நகரில் தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், பஸ்ரா நகரில் பிரிட்டிஷ் துருப்புக்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பெரிதும் சிரமத்தை எதிர்கொள்வதாக பிரிட்டிஷ் இராணுவப் பேச்சாளர் கேணல் நீல் பெக்காம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பஸ்ரா நகரத்தில் ஒழுங்கான பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் இல்லாததால் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. யுத்தம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்படாதவரை குற்றச் செயல்களைத் தடுக்கமுடியாது.

ஆனாலும், பஸ்ரா நகரில் உட்கட்டமைப்பு, அதிகாரங்களை மீள ஏற்படுத்த பிரிட்டிஷ் துருப்புக்கள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன.

சதாம் ஹுசைனின் பாத் கட்சி ஆதரவாளர்கள் பஸ்ரா நகரின் பல பகுதிகளிலும் இருந்துகொண்டு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுவதற்கு தடைக்கல்லாக இருந்து வருகின்றனர்.

பிரிட்டிஷ் துருப்புக்கள் கால்நடையாகவே ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆனாலும் கூட வர்த்தக நிலையங்கள், அரச நிறுவனங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்படுவதைத் தடுக்க முடியவில்லை என கேணல் நீல் பெக் தெரிவித்தார்.

ஐ.நா.அறிக்கைகளின்படி பக்தாத், பஸ்ரா வைத்திய சாலைகள் கூட கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளால் கூட இதனைத் தடுக்க முடியவில்லை எனவும் கூறப்படுகிறது.

அதேவேளை-

பஸ்ரா நகரில் உள்ள பிரிட்டிஷ் படைகள் தமது நிலைகளை வலுப்படுத்திக்கொண்டு- சதாம் ஹுசைனின் படங்களை அழிப்பதில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland


## மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

- ☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
- ☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
- ☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
- ☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1,Galle Road,Ratmalana
யாழ்.தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்)
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk
(சீ-765)


# வீட்டிலிருந்து சென்ற சிறுமி காணவில்லை எனப் புகார்

## மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சகோதரி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்து வெளியே சென்ற பதினான்கு வயதுச்சிறுமியைக் காணவில்லை என, அவரது சகோதரி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மருதனார்மடம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் சாந்தினி (வயது 14) என்னும் சிறுமியே காணாமற்போனவராவார்.

கடந்த புதன்கிழமை 3 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே சென்ற மேற்படி சிறுமி இதுவரை வீடு திரும்பவில்லை என்றும், இவரைப்பற்றிய தகவல்களைப் பெற்றுத் தருமாறும் அவரது சகோதரி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (சு)

# நாற்பது நாட்களாக நீடித்த தொண்டராசிரியர் போராட்டம் முடிவு

கடந்த நாற்பது நாட்களாக நடைபெற்றுவந்த தொண்டராசிரியர்களின் போராட்டம், நேற்று நண்பகல் 11.40 மணியளவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போரட்டத்தினையும் மறியற் போராட்டத்தினையும், திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சிற்கு முன்னால் நடாத்தி வந்தனர்.

கடந்த 3 ஆம் திகதி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்குக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து - நேற்றுமுன்தினம் கல்வியமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மேற்படி விடயம் தொடர்பான முழு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்திருந்தார்.

கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமருடன் கலந்துரையாடியதனைத் தொடர்ந்து அடுத்துவரும் இரு வாரத்திற்குள் தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்க ஆவன செய்யுமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, நேற்று திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் தண்டாயுதபாணி, கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் ஆகியோர் வழங்கிய உறுதிமொழிகளைத் தொடர்ந்து தொண்டராசிரியர்களின் போராட்டம் முடிவிற்கு வந்துள்ளது. (10)

# இன்பருட்டிக் கடற்கரையில் மீனவரை தாக்கிய படையினர்

## கடற்தொழிலாளர் சமாசத்தில் முறையீடு

பருத்தித்துறை, இன்பருட்டிப் பகுதியில் கடற்தொழிலை முடித்துக்கொண்டு கரைதிரும்பிய மீனவர் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில்- வியாபாரிமூலை, முதலாம் கட்டையடியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசு (வயது 45) என்பவரே தாக்கப்பட்டதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறையிடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கடற்றொழிலை முடித்துக்கொண்டு கரை திரும்பிய இவர்- வியாபாரிமூலைச் சந்தையில் மீனவர்கள் மீன்களைச் சந்தைப்படுத்துவதற்கு காலதாமதம் ஏற்பட்டதால், இன்பருட்டியில் உள்ள சந்தையில் சந்தைப்படுத்தச் செல்வதாக படையினரிடம் தெரிவித்துவிட்டு- இன்பருட்டி வழியாகச் சென்றுள்ளார்.

இன்பருட்டி, மீனவர் இறங்குதுறையில் வழிமறித்த படையினர், மேற்படி மீனவரைத் தாக்கியுள்ளனர் என சமாசத்தில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)

# நல்ல கலைஞரான தலைவரால் கலை பண்பாட்டுக்கழகம் உருவானது

நல்லதொரு கலைஞரான எமது தலைவரால்தான் கலை பண்பாட்டுக் கழகம் உருவானது என, திருமலையில் நடைபெறும் இசை, நடன, நாடக விழாவில் உரையாற்றிய கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

எமது தலைவர் சார்பில் வழங்கும் இந்த விருதையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். உங்களைக் கௌரவப்படுத்துவதன் மூலம் எங்களை நாங்களே கௌரவப்படுத்திக் கொள்கின்றோம். நாம் ஆளும்போது நமது கலைகள் அழகு பெறும். நாம் ஆளவேண்டும். நாம் ஆளும்போது சகலதும் அழகு பெறும் என்று குறிப்பிட்டார்.

எமது தேசியத் தலைவர் சிறந்த ஒரு ஓவியர், சிறந்த வாசகர், இசை ஞானம் உள்ளவர், இசையை ரசிப்பவர். அதனால்தான் எமது கலை பண்பாட்டுக்கழகத்தை உருவாக்கினார்.

சீட்டுப் பிடிப்பவர்களை, வட்டிக்குக் கொடுப்பவர்களை, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை சமூகத்திற்குத் தெரிந்திருக்கின்றது. ஆனால், இன்று பாராட்டுப்பெறும் முதுபெரும் கலைஞர்கள் சமூகத்தின் முன் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. இது, நாம் எங்கே செல்கின்றோம் என்ற வினாவை எழுப்புகிறது எனக் குறிப்பிட்ட புதுவை இரத்தினதுரை-

"இந்த மண் இந்தக் கலைஞர்களால் சிறப்புப் பெறும்" என்றும் மேலும் தெரிவித்தார்.



### இலங்கை...

கவனம் செலுத்தப்பட்ட அம்சங்கள், இதுவரை அடைந்த முன்னேற்றம் என்பன குறித்து அமைச்சர் மொறகொட விளக்கமளித்தார்.

வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உச்சிமாநாடு தொடர்பாக இருவரும் விபரமாக ஆராய்ந்ததுடன், வொஷிங்ரனில் அடுத்த திங்கட்கிழமை இடம்பெறவிருக்கும் பேச்சுக்கள் பற்றியும் கவனம் செலுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### வடக்கு...

இந்தப் பேச்சுக்களின் பின்னரே இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என்றும் ஜெனரல் ரெலவ்சன் மேலும் தெரிவித்தார்.

### திருமலை...

இவர்களுடன் திருமதி சிறிஸ்கந்தராஜா, அண்ணாவியார் இராசையா தம்பிராசா, மெல்லிசைத்துறைக்கு திருமலை பத்மநாதன் ஆகியோரும் விருதுகளைப் பெற்றனர்.

யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிரிஷாந்தி ரவீந்திராவின் நாட்டிய நிகழ்வும், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி மாணவர்கள் வழங்கிய 'நெருப்புக்குள் வாழ்வு' நாடகமும், புரட்சிப் பறவைகள் வழங்கிய புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் என்பனவும் நேற்று நடைபெற்றன.

### அளவுக்கதிகமான..

செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸாரால் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன்- போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீதும், வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துவோர் மற்றும் மதுபோதையிலும், அதிவேகத்திலும் வாகனம் செலுத்துவோர், அளவுக்கதிகமான பயணிகளை வாகனத்தில் ஏற்றிச்செல்வோரை உடனடியாகப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவர் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேலும்- சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணம் செய்வோரும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவர்.

இந்த விதிகளை எதிர்வரும் 21 ஆம் திக்தி முதல் அமுல்படுத்துவது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# சமாதான முயற்சிகள் குறித்து கோபி அனான்- அகாஷி பேச்சு!

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி, ஐ.நா. செயலாளர் கோபி அனானைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாக இருவரும் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் ஐ.நா. செயலாளரின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது- இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் அகாஷி விரிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

இதன்போது - இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜப்பான் காட்டிவரும் ஆர்வம் மற்றும் பங்களிப்புக் குறித்து கோபி அனான் பாராட்டுத் தெரிவித்தார்.

# உடனடித் தேவைக்கான திட்ட முன்மொழிவுகள்!

## யாழ்.அரச அதிபரிடம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு, மனிதாபிமான அடிப்படையில் உடனடித் தேவைகளை வழங்கும் பொருட்டு தயாரிக்கப்படவிருக்கும் திட்டவரைபுக்கான முன்மொழிவுகள், நேற்று யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சமர்ப்பிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஒவ்வொரு பிரதேச செயலர்களும், தத்தமது பகுதிகளில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை வெளியிட்டனர். பெரும்பாலும் சகல பிரதேசங்களிலும் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறை, போக்குவரத்து வீதிகள் செப்பனிடப்படாமை, ஆங்கில அறிவு குறைந்த தன்மைபோன்ற பிரச்சினைகளும் முன்வைக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களும் கலந்துகொண்டு, தமது செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன என்று பூரணமான விளக்கங்களை அளித்தன. (சு)


## அதிசயம் ஆனால் உண்மை!

புதுவருடத்தை முன்னிட்டு யாழ். நகரில் எங்குமில்லாதவாறு விசேட சலுகை கட்டணத்தில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களை தெளிவாக வழங்குகிறது.

அருள் கொமினிகேசன்

கனடா, லண்டன், அமெரிக்கா, சுவிஸ், நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இத்தாலி, சுவீடன், நியுஸிலாந்து, டென்மார்க், தாய்லாந்து, ரஷ்யா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான்,
ஆகிய நாடுகளுக்கு

நிமிடம் ஒன்றிற்கு 8/= மட்டுமே!

மேலும் போட்டோ பிரதி, பக்ஸ், ஈ-மெயில், சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

அருள் கொமினிகேசன்
இல.01,பிறவுண்வீதி,நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

(310)


# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.65 | 97.13 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.04 | 152.49 |
| 1 யூரோ | 101.81 | 105.08 |
| 1 சுவிஸ் பிராங் | 69.67 | 70.97 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 58.05 | 59.18 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.86 | 25.86 |


MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
கொழும்பு பல்கலைக்கழகத்தின்
## வெளிவாரிப் பட்டப்படிப்பு
-தகவல் தொழில்நுட்ப இளமாணி-
BIT புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும் MCS அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.
தெரிவுப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் வகுப்புக்கள்,
2ம் அரையாண்டிற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.



BIT
MCS


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.